**உடனடிச் செய்தி வெளியீடு**

## தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை, மூன்று முன்னோடிக் கல்வித் திட்டங்களுக்கு SKOCH 2026 என்னும் உயரிய விருதைப் பெற்றுள்ளது.

**சென்னை, ஜூன் 2026:** தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித்துறை, TN SPARK, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் (Tamil Nadu Model Schools - TNMS) மற்றும் வெற்றிப் பள்ளிகள் ஆகிய மாற்றத்தை நோக்கிய மூன்று முன்னோடிக் கல்வித் திட்டங்களுக்காக, மதிப்புமிக்க SKOCH-2026 என்னும் உயரிய விருதைப் பெற்றுள்ளது. TN SPARK, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் (TNMS) மற்றும் வெற்றிப் பள்ளிகள் என்ற இம்மூன்று முன்னோடித் திட்டங்கள் மூலமாகத் தமிழ்நாடு, சமத்துவம், எதிர்காலத் திறன்கள் மற்றும் பொதுக் கல்வி அமைப்பை உருவாக்குவதில் முன்னோடி மாநிலமாக விளங்குவதை இது எடுத்துக்காட்டுகிறது. SKOCH விருது, பெரிய அளவில் மக்களுக்குப் பயனளித்து, கணிசமான விளைவுகளை ஏற்படுத்துகிற ஆட்சிமுறை மற்றும் பொதுச் சேவைக்கான புதுமைகளைக் கௌரவிக்கும் உயரிய விருதாகும்.

### Gold Categoryஇல் தேர்ந்தெடுக்கப்பட்ட TN SPARK திட்டம்

TN SPARK திட்டம், அரசுப் பள்ளி மாணவர்களுக்குச் செயற்கை நுண்ணறிவு (AI), ரோபோடிக்ஸ், கணினி நிரலாக்கம் (Coding) மற்றும் டிஜிட்டல் திறன்கள் போன்ற எதிர்காலத்திற்கான தொழில்நுட்பத் திறன்களை வழங்குகிறது.

இத்திட்டத்தின் முதல் ஆண்டிலேயே, 5,000-க்கும் மேற்பட்ட பள்ளிகள் செயற்கை நுண்ணறிவுக் (AI) கற்றல் மையங்களாக மாற்றப்பட்டு, 3.53 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். மேலும், 6,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குச் சிறப்புப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டு முடிவுகளின்படி, 61% மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் கூர்சிந்தனைத் திறன்களில் 100-க்கு 80-க்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். இது மாணவர்களின் எதிர்காலத்திற்கான ஆயத்தநிலையை உறுதிப்படுத்துகிறது. இத்திட்டம், SKOCH 2026 – விருதின் தங்கப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

### வெள்ளிப் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் (TNMS) திட்டம்

தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் (TNMS) திட்டம், முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் சேர விரும்பும் திறமையான அரசுப் பள்ளி மாணவர்களுக்கு அரசால் முழுமையான நிதியுதவி மற்றும் தங்குமிட வசதியுடன் கூடிய கல்வி ஆதரவை வழங்குகிறது. தற்போது, மாநிலத்தின் 38 மாவட்டங்களிலும் 11,885 மாணவர்கள், இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர்.

இந்தத் திட்டத்தின் மூலம், முன்னணிக் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை, 75இலிருந்து 1,340 ஆக உயர்ந்து 17 மடங்கு வளர்ச்சியை எட்டியுள்ளது. மேலும், 93 முன்னணிக் கல்வி நிறுவனங்களில் செய்யப்பட்டுள்ள

2,317 சேர்க்கைகள், குறிப்பாக IITஇல் 41 சேர்க்கைகள் மற்றும் 17 சர்வதேச உதவித்தொகைகளும் இதில் அடங்கும். இத்திட்டம், SKOCH 2026 – விருதின் வெள்ளிப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**வெள்ளிப் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றிப் பள்ளிகள் திட்டம்**

வெற்றிப் பள்ளிகள் என்பது, தமிழ்நாட்டு அரசுப் பள்ளி மாணவர்களின் திறமைகளை அடையாளம் கண்டு வளர்ப்பதற்கும், தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்துவதற்குமான முக்கியத் திட்டமாகும்.

திறனறிதல் (Aptitude Mapping), தொழில் வழிகாட்டுதல் மற்றும் தேசிய நுழைவுத் தேர்வுகளுக்கான கட்டமைக்கப்பட்ட பயிற்சி ஆகியவற்றின் மூலம், இத்திட்டம் தற்போது 236 கல்வி வட்டாரங்களில் உள்ள 339 மையப் பள்ளிகளில் 59,270 மாணவர்களைச் சென்றடைந்துள்ளது.

2024–25ஆம் ஆண்டில் மட்டும், 10,400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில் பங்கேற்றதுடன், 151 மாணவர்கள் நாட்டின் முன்னணிக் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர். இத்திட்டம், SKOCH 2026 விருதின் வெள்ளிப்பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இம்மூன்று திட்டங்களும், தமிழ்நாட்டு மாணவர்களிடம் எதிர்காலத்திற்கான திறன்களை உருவாக்குவது முதல் அவர்களின் திறமைகளை அடையாளம் காணுவது, கல்விக்கான வாய்ப்புகளை உருவாக்குவது வரை தமிழ்நாட்டின் கல்வி மாற்றத்திற்கான ஒருங்கிணைந்த பார்வையைப் பிரதிபலிக்கின்றன.

**இது குறித்த பள்ளிக்கல்வித் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர் பி. சந்திர மோகன், இ.ஆ.ப., அவர்களின் கருத்து –**

"எந்தக் குழந்தையின் எதிர்காலமும் அதன் சூழ்நிலைகளால் கட்டுப்படுத்தப்படக்கூடாது என்பதில் தமிழ்நாடு உறுதியாக உள்ளது. சமத்துவமான, உயர்ந்த இலக்குகளைக் கொண்ட, எதிர்காலத் தேவைகளுக்குத் தயாராக்கும் பொதுக் கல்வி அமைப்பை உருவாக்குவதே எங்களின் தொடர்ச்சியான நோக்கமாகும்."

**பள்ளிக்கல்வித் துறை,**
**தமிழ்நாடு அரசு.**